**செய்தி வெளியீடு எண்: 52** **நாள்: 10.12.2024**

# மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தமிழ்நாடு, ஆளுநர் மாளிகை சார்பாக நடத்தப்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான கட்டுரைப் போட்டிகளின் வெற்றியாளர்கள் விபரம் அறிவிக்கப்படுகிறது

டிசம்பர் 11ஆம் தேதி நடைபெறும் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 143-வது பிறந்தநாள் விழா கொண்டாட்டம் மற்றும் 'பாரதிய மொழிகள் தின' விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி, அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு முழுவதும் மாணவர்களுக்கான வருடாந்திர மாநில அளவிலான கட்டுரைப் போட்டி தமிழ்நாடு, ஆளுநர் மாளிகை சார்பாக அறிவிக்கப்பட்டது. மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் மகத்தான பங்களிப்பு மற்றும் நமது வளமான, பன்முகத்தன்மை கொண்ட மொழிகளைக் கொண்டாடும் நோக்கத்தை குடிமக்களுக்கும், குறிப்பாக நம் தேசத்தின் இளைஞர்களுக்கும் எடுத்துச் சொல்வதே இந்த முயற்சியின் குறிக்கோளாகும்.

இம்முயற்சியானது சுதந்திரம் மற்றும் சமூக சீர்திருத்தத்திற்கான மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் முக்கியப் பங்களிப்பையும், அவருடைய எழுத்துகள் மற்றும் கவிதைகள் மூலம் எவ்வாறு தேசிய உணர்வைத் தூண்டி, தேசத்தை ஒரே குடும்பமாக ஒன்றிணைத்தது என்பதையும் போற்றுகிறது. இந்தியாவின் மொழியியல் ஆய்வு, ஆன்மீகம் மற்றும் கலாச்சார பாரம்பரியத்துடன் ஆழமான தொடர்பை வளர்ப்பதை மூலமாக கொண்டு நடத்தப்பட்ட இப்போட்டியானது, நமது மாநில இளைஞர்களுக்கிடையே, தேசிய சுதந்திரப் போராட்ட வீரர்களை பற்றிய நினைவுகூர்தல் மற்றும் 2047 ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தைக் கட்டியெழுப்புவதற்கு மாபெரும் பங்களிப்பை அளித்திட அவர்களை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நடத்தப்பட்ட மாநில அளவிலான கட்டுரைப் போட்டியில், சுதந்திரப் போராட்டம் தொடர்புடைய தலைப்புகளில் கட்டுரை எழுத பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் அழைக்கப்பட்டனர். பள்ளி மாணவர்களுக்கான தலைப்பாக, "வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம்", மற்றும் கல்லூரி மாணவர்களுக்காக "வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகமும் தேசிய சுதந்திர உணர்வில் அதன் மறுமலர்ச்சியும்" என்ற தலைப்பில் கட்டுரை போட்டிகள் நடத்தப்பட்டது.

இந்த ஆண்டுக்கான போட்டியில் மாணவர்கள் ஆர்வத்துடன் சமர்ப்பித்த கட்டுரைகளின் தரத்தை மிகவும் பாராட்டிய நடுவர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் போட்டியின் முடிவுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. தகுதிப் பட்டியலின் அடிப்படையில், வெற்றியாளர்கள் பின்வருமாறு:

## பள்ளி மாணவர்களுக்காக நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றிப் பெற்றவர்கள்

| பரிசு | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|
| முதல் பரிசு<br>(2 வெற்றியாளர்கள்) | எஸ்.எம். விகாஷ் குமார்,<br>12 ஆம் வகுப்பு, ஆதர்ஷ் வித்யா கேந்திரா, வெட்டூர்ணிமடம், கன்னியாகுமரி. | ஆர்.அக்ஷராஶ்ரீ,<br>10 ஆம் வகுப்பு., செவன்த் டே அட்வென்டிஸ்ட் ஆங்கில மேல்நிலைப்பள்ளி, மதுரை. |
| இரண்டாம் பரிசு<br>(2 வெற்றியாளர்கள்) | ஏ.ஆர்.ஜானிஸ்தா,<br>6 ஆம் வகுப்பு, டபிள்யூ. பி.ஏ. சௌந்தரபாண்டியன் மேல்நிலைப்பள்ளி, அயனாவரம், சென்னை. | இ.ஜெயகாயத்திரி,<br>12 ஆம் வகுப்பு, ஶ்ரீ ஜெயேந்திர சுவாமிகள் சில்வர் ஜூபிலி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மகாராஜா நகர், திருநெல்வேலி. |
| மூன்றாம் பரிசு<br>(3 வெற்றியாளர்கள்) | பி.நிவேதா,<br>9 ஆம் வகுப்பு, லாலாஜி மெமோரியல் ஒமேகா இன்டர்நேஷனல் பள்ளி, கொளப்பாக்கம், சென்னை. | பி.எஸ்.சிந்து,<br>11 ஆம் வகுப்பு, குழந்தைகள் பாரடைஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகள், செங்குன்றம், சென்னை.<br><br>ஆர்.கனிஷ்கா,<br>11 ஆம் வகுப்பு, செயின்ட் பிலோமினாஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கிடங்கல்-2, திண்டிவனம், விழுப்புரம் |
| சிறப்புப் பரிசு<br>(2 வெற்றியாளர்கள்) | ---- | சி.சந்தோஷ்,<br>12 ஆம் வகுப்பு, ராமசுவாமி செட்டியார் டவுன் மேல்நிலைப் பள்ளி, பரமேஸ்வரநல்லூர், சிதம்பரம்<br><br>ஜுவானிடா லூசி சச்சின் 12வது வகுப்பு, ஜெய்கோபால் கரோடியா விவேகானந்தா வித்யாலயா, சென்னை |

## கல்லூரி மாணவர்களுக்காக நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றிப் பெற்றவர்கள்

| பரிசு | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|
| முதல் பரிசு<br>(2 வெற்றியாளர்கள்) | செல்வி.ஜெ.திவ்யலட்சுமி,<br>எம்.எஸ்சி., 2 ஆம் ஆண்டு, நுண்ணுயிரியல் துறை, ஆதிபராசக்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கலவை, ராணிப்பேட்டை. | திரு. அபிமன்யு குமார் சர்மா,<br>முதலாம் ஆண்டு பி.எஸ்சி., குற்றவியல் & குற்ற நீதி அறிவியல், ஏஎம் ஜெயின் கல்லூரி, மீனம்பாக்கம், சென்னை. |
| இரண்டாம் பரிசு<br>(2 வெற்றியாளர்கள்) | திரு.எஸ்.சுப்ரமணியசிவா,<br>3 ஆம் ஆண்டு, பி.டெக். AI&DS, அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகம், கோயம்புத்தூர். | திரு. எஸ்.முஹம்மது சுஹைல், இறுதி ஆண்டுக்கு முந்தைய ஆண்டு, பி.எஸ்சி., மருத்துவ உதவியாளர், பிஎஸ்ஜி இன்ஸ்டிடியூட் ஆப் மெடிக்கல் சயின்ஸ் & ரிசர்ச், கோயம்புத்தூர். |
| மூன்றாம் பரிசு<br>(2 வெற்றியாளர்கள்) | செல்வி.ஏ.பவித்ரா,<br>பி.ஏ., தமிழ் 3 ஆம் ஆண்டு, ஆற்காடு ஶ்ரீ மகாலட்சுமி மகளிர் கல்லூரி, வில்லப்பாக்கம், ராணிப்பேட்டை. | செல்வி. பி. தன்யலட்சுமி,<br>முதலாம் ஆண்டு, பி.காம்., தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை. |

| | | |
|---|---|---|
| சிறப்புப் பரிசு (3 வெற்றியாளர்கள்) | ----- | செல்வி.வி.ரூபஸ்ரீ, 2 ஆம் ஆண்டு, பி.ஏ., ஏ.வி.பி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, டி.எம்.பூண்டி, திருப்பூர்.<br><br>செல்வி. ஏ.சித்ரா, 2 ஆம் ஆண்டு, எம்.எஸ்சி., யோகா தெரபி, MAHER, கே.கே. நகர், சென்னை.<br><br>செல்வி.எம்.கனிமொழி, முதலாம் ஆண்டு, பி.ஏ., ஆங்கிலம், கம்பன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருவண்ணாமலை |

இந்த ஆண்டு மாநில அளவிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு ஆளுநர் மாளிகையின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்கள். மேலும், இப்போட்டியை மிகவும் அர்த்தமுள்ளதாக மாற்றிய அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் பாராட்டுக்கள்.

பள்ளி மற்றும் கல்லூரி பிரிவுகளில் முதல் இடம், இரண்டாம் இடம் மற்றும் மூன்றாம் இடம் வென்றவர்களுக்கு முறையே ₹ 50,000 (ரூபாய் ஐம்பதாயிரம்), ₹ 30,000 (ரூபாய் முப்பதாயிரம்) மற்றும் ₹ 25,000 (ரூபாய் இருபத்தைந்தாயிரம்) ரொக்கப் பரிசுகளோடு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படும். சிறப்புப் பரிசு பெற்றவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

ஜனவரி 26, 2025 அன்று சென்னை ஆளுநர் மாளிகையில் நடைபெறவுள்ள குடியரசு தின விழா-2025 கொண்டாட்டத்தின் போது மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் கட்டுரைப் போட்டியில் வெற்றிப் பெற்ற மாணவர்களுக்கு அவர்களின் பெற்றோர்கள் மற்றும் பள்ளி-கல்லூரி முதல்வர்களின் முன்னிலையில் ரொக்கப் பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

---

**ஆளுநர் மாளிகை, சென்னை-22** **வெளியீடு :-**
**நாள்:10.12.2024** **மக்கள் தொடர்பு அலுவலகம்**